# பொதுக்காலம் 2ஆம் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

கடவுள் உலகையே ஆளுகிறார். ஆனால் இறைவேண்டல் செய்யத் தெரிந்த மனிதர் கடவுளையே ஆளுகிறார். கடவுள் 'முடியாது' என்று சொன்ன பிறகும், இறைவேண்டல் தெரிந்தவர் கடவுளை 'முடியும்' என்று சொல்ல வைக்கிறார் என்று கூறும் புனித ஜான் மரிய வியான்னியின் சிந்தனையோடு பொதுக்காலம் 2ஆம் ஞாயிறுத் திருப்பலிக்கு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் இனிதே வரவேற்கிறேன்.

இயேசுவில் இறைவன் வெளிப்படுத்திய கடவுளின் அன்பு, இதுவரை வெளியிடப்பட்ட எல்லா வெளிப்பாட்டிலும் மிகவும் மேலானது. இயேசு நிகழ்த்தும் இந்த மாற்றம் உலகின் மானிட சமூகத்தில் நிகழும் எல்லா மாற்றங்களிலும் மிக உயர்வான மாற்றம். சாதாரண தண்ணீராய் இருந்த மானிடம் இயேசுவில் வெளியிடப்பட்ட இறையன்பின் மீட்பின் ஆற்றலால் மிகத் தரமான திராட்சை இரசமாக உயர்வடைகிறது. நம் காலியான வெறுமையான வாழ்வை நிறைவாக்கிட, வளமாக்கிட இறைவன் இயேசுவே நம் வாழ்வு தரும் ஜீவ தண்ணீராக நம் வாழ்வில் கலந்திட அருள் வேண்டி இப்பலியில் முழுமனதோடும், பக்தியோடும் பங்கேற்போம்.

## முதல் வாசக முன்னுரை

ஆண்டவரால் நாம் பெறும் விடுதலையைப் பற்றியும், ஆண்டவரின் கையில் அழகிய மணிமுடியாகவும், ஆண்டவர் விரும்பும் மக்களாக இருக்கவும், கடவுளின் அளவில்லாத அன்பு நம்மை வழிநடத்தும், இறைவன் நம்மை முழுமையாக ஏற்று அன்பு செய்கிறார் என்ற நம்பிக்கையைத் தரும் எசாயா இறைவாக்கினரின் குரலுக்குச் செவிசாய்ப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

தந்தை, மகன், தூய ஆவியாரை நம்பும் நாம் தூய ஆவியாரின் செயல்பாடுகள் மீது அதிக நம்பிக்கை கொண்டு அவர் வழங்கும் கொடைகள் பற்றிப் புரிந்து கொண்டு, அதே தூய ஆவியின் வல்லமையால் நம் வாழ்வை வளமாக்கிட அழைப்பு விடுக்கும் புனித பவுலடியாரின் வார்த்தைக்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பின் இறைவா! எம் திரு அவையை ஆசீர்வதியும். உம்முடைய மீட்புப் பணியில், பயணத்தில் நாங்களும் நம்பிக்கையோடு பயணம் செய்து நீர் தரும் மீட்பை முழுமையாக அனுபவிக்க அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆறுதலின் இறைவா! எம் நாட்டு மக்களையும், நாட்டுத் தலைவர்களையும் ஆசீர்வதித்து, வளமையும் அன்பும் ஒற்றுமையும் நிறைந்த நாடாக மாறிடவும், கொரோனா நோய்த் தொற்றிலிருந்து மக்களைக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. உண்மையின் இறைவா! எம் உலகில் மலிந்து கிடக்கும் சுயநலம் என்ற உணர்வு களையப்பட்டு, பிறர்நல நோக்குடன், தன்னிடம் உள்ளதைப் பிறரோடு பகிர்ந்து வாழும் மனம் பெற்றிட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. நலம் அளிப்பவரே எம் இறைவா! நோயால் வாடும் உள்ளங்களுக்கு நீரே மருத்துவராக இருந்து நலம் அளித்திடவும், எவ்வித தீங்கும் இவர்களுக்கு நேரிடாமல் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com